

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் (25–01–2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர் /பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ., தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.



மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் நேற்று முன்தினம் (25–01–2024) இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை முகாம் அலுவலகத்தில் சந்தித்து மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து சிறந்த திறன் மேம்பாட்டு பயிற்சிகளை வழங்குவது தொடர்பாக கலந்துரையாடினர். இக்கூட்டத்தில் மேற்கு ஆஸ்திரேலிய துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர் ரீட்டா சஃபியோட்டி MLA, FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர் / மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர்/பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சிமாநில உறவுகள் டாக்டர்.ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்.எல்.ஏ, தமிழ்நாடு அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் தாரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் மேலாண்மை இயக்குநர் திருமதி ஜெ. இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்தின் உயர் அலுவலர்கள் உள்ளனர்.

### வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்ப

# இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்கும் திட்டம்!

## அமைச்சர் உதயநிதி ஸ்டாலினுடன் - மேற்கு ஆஸ்திரேலிய குழுவினர் ஆலோசனை!

சென்னை, ஜன. 27 -

வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்க, இளைஞர்களுக்கு பயிற்சி அளிக்க, பயிற்றுநர்களை உருவாக்கும் திட்டம் தொடர்பாக அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களுடன் மேற்கு ஆஸ்திரேலியாவின் உயர் அலுவலர் தூதுக்குழுவின் ஆலோசித்துள்ளனர்.

இது குறித்து வெளியான செய்திக் குறிப்பு வருமாறு:-

மேற்கு ஆஸ்திரேலியாவைச் சேர்ந்த உயர் அலுவல் தூதுக்குழுவினர் இளைஞர் நலன், விளையாட்டு மேம்பாடு மற்றும் சிறப்புத் திட்ட செயலாக்கத்துறை அமைச்சர் உதயநிதி ஸ்டாலின் அவர்களை திறன் மேம்பாட்டு பயிற்சிகள் தொடர்பாக நேற்று முன்தினம் (25.01.2024) சந்தித்து கலந்துரையாடினர். இந்த உயர்நிலை அலுவல் பிரதிநிதிகள் குழுவில் மேற்கு ஆஸ்திரேலியாவை சேர்ந்த ரீட்டா சஃபியோட்டி பஸ் எம்.எல்.ஏ. துணை முதல்வர், பொருளாளர், போக்குவரத்து மற்றும் சுற்றுலாத்துறை அமைச்சர், டாக்டர் ஜெகதீஷ் கிருஷ்ணன் எம்எல்ஏ எம்பிபிஎஸ்; FRACGP முதல்வரின் பாராளுமன்ற செயலாளர், மாநில தொழில் வளர்ச்சி, வேலைகள் மற்றும் வர்த்தக அமைச்சர், பொதுத்துறை மேலாண்மை, கூட்டாட்சி மாநில உறவுகள் ராபி வில்லியம்சன், துணை முதல்வரின் மூத்த ஆலோசகர் மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரிதிநிதி, திருமதி நஷித் சௌத்ரி, முதலீடு மற்றும் வர்த்தக ஆணையர், இந்தியாவளைகுடா, முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா, மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. கிளியோனா ஜேம்ஸ், இயக்குனர், இந்தியாவளைகுடா, மேற்கு ஆஸ்திரேலியா முதலீடு மற்றும் வர்த்தகம், மேற்கு ஆஸ்திரேலியா அரசின் பிரதிநிதி திருமதி. சுவாதி பாலசுப்ரமணியன், வர்த்தக மேம்பாட்டு மேலாளர், முதலீடு மற்றும் வர்த்தகம், உள்ளிட்டவர்கள் கலந்து கொண்டனர்.

மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் இணைந்து செயலாற்றுவதற்கான சாத்தியகூறுகளை ஆராய்வதே சந்திப்பின் நோக்கமாக இருந்தது. பயிற்சி, மதிப்பீடு மற்றும் சான்றளிப்பு ஆகியவற்றை உள்ளடக்கிய, ஆசிரியர்களுக்கான விரிவான பயிற்சிகளை கூட்டாக நடத்துவதற்கான வாய்ப்புகள் குறித்து கலந்துரையாடலில் ஆராயப்பட்டன.

தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகத்துடனான நெருங்கிய கூட்டுறவைக் கருத்தில் கொண்டு, இளைஞர்களுக்கு வளர்ந்து வரும் திறன் தேவைகளுக்கு ஏற்றவாறு பயிற்சி அளிக்க பயிற்றுநர்களை தயார் செய்யும் திட்டங்களை உருவாக்குவதே இதன் நோக்கமாகும்.

இதை செயல்படுத்துவதற்கான திட்டங்களை செயல்படுத்தும் வண்ணம் மேற்கு ஆஸ்திரேலியா மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டுக் கழகம் ஆகிய இரண்டு தரப்பிலும் தொழிற்கல்விக்கான வலுவான கட்டமைப்பை வடிவமைப்பதில் உறுதியுடன் இருக்கும், இது இன்றைய மாறிவரும் வேலைவாய்ப்பு சந்தையில் சிறந்து விளங்குவதற்குத் தேவையான திறன்களைக் கொண்ட தனிநபர்களை மேம்படுத்துவதற்கான கூட்டு நோக்கத்தை பிரதிபலிக்கிறது.

இக்கலந்துரையாடல் கூட்டத்தில் அரசு சிறப்பு திட்ட செயலாக்கத்துறை செயலாளர் டாக்டர் டேரேஸ் அகமது, தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் மேலாண்மை இயக்குநர் ஜெ.இன்னசென்ட் திவ்யா மற்றும் மேற்கு ஆஸ்திரேலியா உயர் அலுவலர்கள் மற்றும் தமிழ்நாடு திறன் மேம்பாட்டு கழகத்தின் உயர் அலுவலர்கள் கலந்து கொண்டனர்.




தென்காசி தெற்கு மாவட்ட தி.மு.க. சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் கீழப்பாவூர் மைதானத்தில் மாவட்ட மாணவரணி அமைப்பாளர் ரமேஷ் தலைமையில் நடைபெற்றது. இந்நிகழ்வில் கழக துணை பொதுச் செயலாளர் தூத்துக்குடி நாடாளுமன்ற உறுப்பினர் கனிமொழி கருணாநிதி அவர்கள் பங்கேற்று சிறப்புரையாற்றினார். உடன் தென்காசி தெற்கு மாவட்டப் பொறுப்பாளர் வே.ஜெயபாலன், மாநில சிறுபான்மையினர் நல உரிமைப் பிரிவு துணைச் செயலாளர் சாகுல் அமீது,மாநில விவசாய அணி இணை செயலாளர்கள் அப்துல்காதர், செல்லப்பா, தலைமைச் செயற்குழு உறுப்பினர் மா.செல்லத்துரை, ஆறுமுகச்சாமி உள்பட கழக நிர்வாகிகள் பலர் உள்ளனர்.

### 75 ஆண்டுகளாக மொழி – இனம் –

# கலாச்சாரத்தைப் பாதுகாத்து வரும் ஒரே இயக்கம் தி.மு.க.!

## அமைச்சர் கேஆர். பெரியகருப்பன் பேச்சு!



சிவகங்கை, ஜன. 27 -

சிவகங்கை மாவட்டத்தில் மொழிப்போர் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் சிவகங்கை, திருப்பத்தூர், மானாமதுரை, காரைக்குடி, ஆகிய நான்கு சட்டமன்றத் தொகுதிகளில் நடைபெற்றது.

இந்த கூட்டத்தில் கலந்துகொண்டு சிவகங்கை மாவட்ட கழக செயலாளரும் , கூட்டுறவு த்துறை அமைச்சருமான கேஆர். பெரியகருப்பன் பேசியதாவது.

பேரறிஞர் அண்ணா அவர்களால்75ஆண்டுகளுக்கு முன் திராவிட முன்னேற்ற கழகம் துவங்க ப்பட்டது. அண்ணா அவர்கள் கழகத்தை துவக்கிய போது அரசியலுக்கு வர வேண்டும் என்பதற்காக துவங்கப்படவில்லை. சமுதாய முன்னேற்றத்திற்காக துவக்கப்பட்டது. மொழி ,இனம் சமுதாயம், ஆகியவற்றை பாதுகாப்பதற்கு துவக்கப்பட்டது. பின்னர் நாளடைவில் அரசியலில் ஈடுபட்டு மக்கள் பணியாற்ற வேண்டும் என்பதற்காக தேர்தலில் போட்டியிட்டது. அரசியலில் ஈடுபட்டாலும் கொள்கை மாறாமல் இன்றுவரை அந்த கொள்கை வழி ஆட்சி நடைபெற்று வருகின்றது. ஆட்சியில் இருந்தாலும் சரி இல்லாவிட்டாலும் சரி கொள்கைகளை திராவிட முன்னேற்ற கழகம் என்றுமே கைவிட்டதில்லை இந்தியாவில் கொள்கைகளுடன் செயல்படும் ஒரே இயக்கம் தி.மு.க. தான் என்பதில் நாம் அனைவரும் பெருமைப்பட வேண்டிய விஷயமாகும்.

பேரறிஞர் அண்ணா, தலைவர் கலைஞர் வழியில் தமிழக முதல்வர் தளபதி அவர்கள் கழகத்தின் கொள்கையினை இன்றுவரை காப்பாற்றி வருகிறார். மொழி, இனம், சமுதாயம் பாதுகாக்கப்பட வேண்டும். கலாச்சாரங்கள் பின்பற்றப்பட வேண்டும் என்பதில் முதல்வர்அவர்கள் உறுதியாக உள்ளார்கள். உலக அளவில் மொழியை பாதுகாப்பதில் இனத்தை பாதுகாப்பதில் இன்று முதல்வர் அவர்கள் தனி கவனம் செலுத்தி பாதுகாத்து வருகிறார். மொழிக்காக உயிர்நீத்த தியாகிகளின் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் நடத்தும் ஒரே தகுதி நமது இயக்கம் ஒன்றுக்கு தான் உண்டு. மற்றவர்கள் அவ்வப்போது நடத்துவார்கள். சிறிது காலம் நடத்தாமல் விட்டுவிடுவார்கள் .ஆனால் நாம் தொடர்ந்து வீரவணக்க நாள் பொதுக்கூட்டத்தை மொழிப்போர் தியாகிகளுக்காக நடத்தி வருகின்றோம். இதன் மூலம் இன்றைய இளைஞர் சமுதாயத்தினர் கழகத்தின் வரலாறு பற்றியும் மொழிக்காக உயிர் நீத்த தியாகிகளின் வரலாறு பற்றியும் தெரிந்து கொள்ள ஒரு வாய்ப்பாக அமையும். இத்தகைய மொழிப்போர் தியாகிகளின் உணர்வுகளை பாதுகாப்பதில் தி.மு.கழகம் உறுதியாக உள்ளது என்பதில் நாம் அனைவரும் மகிழ்ச்சி அடைய வேண்டும்.மாணவர்கள் இளைய தலைமுறையினர் கழகத்தின் முழுமையான வரலாறுகளை தெரிந்து கொள்ள வேண்டும்.

இவ்வாறு அமைச்சர் கே.ஆர்.பெரியகருப்பன் பேசினார்.

### சபா .இராஜேந்திரன் எம்.எல்.ஏ. தலைமை!

# நெய்வேலியில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம்!

## முன்னாள் அமைச்சர் – தாட்கோ தலைவர் உ.மதிவாணன் சிறப்புரை!

கடலூர், ஜன. 27 -

நெய்வேலி நகர திமுக மற்றும் தொ.மு.ச சார்பில் மொழி போர் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் வட்டம் 25 தொமுச வளாகத்தில் நடைபெற்றது.

நெய்வேலி சட்டமன்ற உறுப்பினர் சபா. இராஜேந்திரன் தலைமை தாங்கினார். நகர செயலாளர் வி.பக்கிரிசாமி வரவேற்புரையாற்றினார்.முன்னாள் அமைச்சரும் ,ஆதிதிராவிடர் வீட்டு வசதி, மேம்பாட்டு கழக தலைவர் உ.மதிவாணன், தலைமை கழக பேச்சாளர் எஸ். கே.ஸ்ரீராம் ஆகியோர் கலந்துகொண்டுசிறப்புரையாற்றினார். இந்நிகழ்ச்சியில் தலைமை செயற்குழு உறுப்பினர் சா.இராசவன்னியன், பண்ருட்டி ஒன்றிய பெருந்தலைவர் சபா .பாலமுருகன், மாவட்டப் பொருளாளர் ஜி.தண்டபாணி, ஒன்றிய கழக செயலாளர் குணசேகரன், தலைமை பொதுக்குழு உறுப்பினர் பொ.புகழேந்தி, தொமுச தலைவர் பா.திருமாவளவன், பொருளாளர் ஐயப்பன், மாவட்ட தொ.மு.ச. கவுன்சில் செயலாளர் மு.சு. பொன்முடி, நகர பொருளாளர் ஜே.மதியழகன், நகர துணை செயலாளர்கள் இராம.கருப்பன், கே. செந்தமிழ்செல்வன், கோமதி செந்தில்குமார், மாவட்டப் பிரதிநிதி ஏ. நாசர், ஒன்றிய துணைசெயலாளர் சுமதி நந்தகோபால், முன்னாள் தொமுச நிர்வாகிகள் சிவந்தான்செட்டி,

வீர.இ ராமச்சந்திரன், வி.குருநாதன், மாவட்ட இளைஞரணி துணை அமைப்பாளர் ஆ.சதாம், மாவட்ட தொண்டரணி தலைவர் மணிவண்ணன், தொ.மு.ச. காண்டிராக்ட் சங்க செயலாளர் கனக.பழனிவேல், வட்டம் 21 சந்திரசேகர், மாணவரணி ரமேஷ், கிளைக் கழக செயலாளர்கள், தொமுச துணைத் தலைவர்கள், பகுதி செயலாளர்கள் ,கழக நிர்வாகிகள்சார்பு அணி நிர்வாகிகள் கலந்து கொண்டனர். முடிவில் மாவட்டப் பிரதிநிதி பா. இரவிச்சந்திரன் நன்றி கூறினார்.



மதுரை மாநகர் மாவட்ட தி.மு.க. மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகளுக்கு வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் மாணவரணி அமைப்பாளர் த. அன்பு ( எ ) துரை கோபால்சாமி தலைமையில் முன்னாள் நாடாளுமன்ற உறுப்பினர் தலைமை கழக பேச்சாளர் கம்பம் செல்வேந்திரன் முன்னிலையில் நடைபெற்றது. மாநகர் மாவட்டச் செயலாளர் கோ தளபதி எம்.எல்.ஏ. சிறப்புரை ஆற்றினார். உடன் தணிக்கை குழு உறுப்பினர் வ.வேலுசாமி, உயர்நிலை செயல்திட்டக் குழு உறுப்பினர் பெ.குழந்தை வேலு, மாநகராட்சி மேயர் இந்திராணி பொன் வசந்த், மாநில மாணவர் அணி துணைச் செயலாளர் அதலை செந்தில்குமார், தலைமைச் செயற்குழு உறுப்பினர்கள் மா.ஜெயராம், தனச்செல்வம், மாவட்ட கழக நிர்வாகிகள் மா.ஒச்சு பாலு, மூவேந்திரன், சின்னம்மாள், ராகவன், முருகவேல், இளைஞர் அணி அமைப்பாளர் சௌந்தர்ராஜன், மாணவரணி துணை அமைப்பாளர்கள் திருப்பதி, அரிசங்கர், நித்தியா, மதன்மோகன், சந்துரு மற்றும் திரளான கழக நிர்வாகிகள் கழகத்தினர் கலந்து கொண்டனர்.



விருதுநகர் மாவட்டம் மாணவர் அணி சார்பில் மொழிப்போர்த் தியாகிகள் வீரவணக்க நாள் பொதுக்கூட்டம் அருப்புக்கோட்டையில் நடைபெற்றது. இந்த பொதுக்கூட்டத்தில் வருவாய் மற்றும் பேரிடர் மேலாண்மை துறை அமைச்சர் கே.கே.எஸ்.எஸ்.ஆர்.ராமச்சந்திரன், முன்னாள் ஒன்றிய அமைச்சர் வேங்கடபதி, சிவகங்கை மாவட்ட தி.மு.க. அவைத்தலைவர் கணேசன் சிறப்புரை ஆற்றினர். உடன் நகர செயலாளர் ஏ.கே.மணி, மாவட்டப் பொருளாளர் சாகுல் ஹமீது, சேர்மன் சுப்பாராஜா, சேர்மன் சிவப்பிரகாசம், மாநில நெசவாளர் அணி பழனிச்சாமி, பாபுஜி ஆகியோர் உள்ளனர்.



தமிழ்நாடு பள்ளிக் கல்வித்துறை அமைச்சரும், தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத்தின் தலைவருமான அன்பில் மகேஸ் பொய்யாமொழி, சென்னை, தமிழ்நாடு பாரத சாரண சாரணியர் இயக்கத் தலைமையகத்தில் நடைபெற்ற 75 வது ஆண்டு குடியரசு தின விழாவில் கலந்து கொண்டு சாரணியர்களின் அணி வகுப்பு மரியாதையை ஏற்று கொண்டு, தேசியக் கொடியேற்றினார். தொடர்ந்து பல்வேறு போட்டிகளில் வெற்றி பெற்றவர்களுக்கு பரிசுகள் வழங்கி சிறப்புரையாற்றினார். இந்நிகழ்வில் இயக்குநர் முனைவர் க. அறிவொளி, தொடக்கக் கல்வி இயக்குநர் கண்ணப்பன் ஆகியோர் கலந்து கொண்டார்கள்.